தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கொள்ளிடத்தில் கதவணை: முதல்வருக்கு மார்க்சிஸ்ட் நன்றி

கொள்ளிடம் ஆற்றில் ரூ.400 கோடியில் கதவணை கட்டப்படும் என்று அறிவித்துள்ள முதல்வர் ஜெயலலிதாவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும், சட்டப்பேரவை உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன் (சிதம்பரம்) நன்றி தெரிவித்தார். இது குறித்து முதல்வர் ஜெயலலிதாவுக்கு திங்கள்கிழமை அவர் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பது: கொள்ளிடம் ஆற்றில் கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த ஆதனூர்-குமாரமங்கலம் இடையே ரூ.400 கோடியில் கதவணை கட்டி, கொள்ளிடம் ஆற்றின் வடிநீரை பாசனத்துக்கும், குடிநீருக்கும் பயன்படுத்தும் வகையில் திருப்பி விடும் திட்டத்தினை சட்டப்பேரவையில் அறிவித்ததற்காக தங்களுக்கு அப்பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொள்ளிடம் ஆற்று நீரை குறுக்கே அணை கட்டி திருப்பி விட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என சட்டப் பேரவையில் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். இதற்காக கடந்த ஜூலை 2-ஆம் தேதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எனது தலைமையில் 25 கி.மீ. நடைப்பயணம் நடத்தப்பட்டு தங்களுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. பல விவசாய அமைப்புகளும் இதே கோரிக்கையை எழுப்பி வந்துள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் சிதம்பரம், கிள்ளை பகுதியிலும் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் கோடை கால சாகுபடிக்கு வழி ஏற்படும். நிலத்தடி நீர் மட்டம் உயரவும், கடல் நீர் உள்புகுந்து நிலத்தடி நீர், உவர் நீராக மாறுவதைத் தடுக்கவும் பயன்படும். கோடை காலத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்கவும் இத்திட்டம் பேருதவியாக அமையும் என கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### நீலகிரி, கோவையில் இன்று ஆங்காங்கே கன மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை ஆங்காங்கே கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளம், கடலோர கர்நாடகப் பகுதிகளில் தென் மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்து வருகிறது. இதன் தாக்கமாக தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டத்தின் மழை பகுதிகளில் செவ்வாய்க்கிழமை கன மழை பெய்யும்.

சென்னை மாநகரைப் பொருத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை ஒரு சில இடங்களில் பெய்யும். அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 99 மற்றும் 82 டிகிரி ஃபாரன்ஹுீட் வெயில் பதிவாகும்.

மழை:

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் அதிகபட்சமாக 190 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. மேலும் தேனி மாவட்டம் பெரியார், வால்பாறையில் தலா 90 மி.மீ, வால்பாறை தாலுகா அலுவலகத்தில் 70 மி.மீ, புதுக்கோட்டை மாவட்டம் அரிமளத்தில் 50 மி.மீ, தேவலா, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, மனமேல் குடியில் தலா 20 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இந்த நிலையில் திங்கள்கிழமை வடகிழக்கு திசையிலிருந்து சென்னை மீனம்பாக்கத்தில் மாலை 4.58 மணிக்கு புயல் காற்று வீசியது. சுமார் 55 கி.மீட்டர் வேகத்தில் வீசிய இந்தப் புயல் காற்று 2 நிமிடங்களுக்குப் பின்னர் கடந்து சென்றதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெயில்:

தமிழகத்தில் அதிகபட்சமாக திங்கள்கிழமை மதுரையில் 102 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியது. அதேபோல் கடலூரில் 101, நாகப்பட்டினம் 100, பாளையங் கோட்டை 98, திருச்சி 101, தூத்துக்குடி 99, வேலூர் 98, சென்னை 98.4 டிகிரி ஃபாரன்ஹுீட் அளவுக்கு வெயில் பதிவாகியதாகவும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பஞ்சு விலையில் பெரும் மாற்றமிருக்காது: "சைமா' தலைவர் டி.ராஜ்குமார்



இந்தியாவில் பஞ்சு விலையில் பெரும் மாற்றமிருக்காது என்று, தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் (சைமா) தலைவர் டி.ராஜ்குமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்தி: பருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஜவுளித்துறை கடந்த 2012- 2013 நிதியாண்டைவிட 2013- 2014 நிதியாண்டில் லாபகரமாக உள்ளது. ஆனால் தற்போதைய நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரையில் ஜவுளித்துறையில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் சீனா, ஐரோப்பிய நாடுகள் தங்கள் இறக்குமதியை இந்தியாவிலிருந்து குறைத்ததே. இந்திய ஜவுளிச் சந்தை பொதுவாக கோடைக்காலத்தில் சிறிது மந்தமாக இருக்கும். இதனால் தமிழகம், மகாராஷ்டிரத்தில் நெசவு உற்பத்தி 20 முதல் 30 சதவீதம் குறைவாக இருக்கும். பருவமழை தாமதம், ஜூன் மாதம் வரை நீடித்த வெயில், ரம்ஜான் பண்டிகை முன்னரே வந்தது ஆகிய காரணங்களால் விசைத்தறி நெசவு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இப்போது பண்டிகைக் காலங்கள் துவங்க உள்ளதால், மந்த நிலை மாறி ஜவுளி வணிகம் சுறுசுறுப்படையத் துவங்கியுள்ளது. பருத்தி உற்பத்தியில் வரலாறு காணாத அளவுக்கு 390 லட்சம் பேல் உற்பத்தி செய்யப்பட்டதால் பஞ்சு விலை ஒரே சீராக இருந்தது. கடந்த 2 மாதங்களில்

மட்டும் விலை உயர்ந்துள்ளது. உற்பத்தியான பஞ்சில் 112 லட்சம் பேல் ஏற்றுமதியாகியுள்ளது.

பொருளாதார சுணக்க நிலை, சீனாவின் பருத்திக் கொள்கை ஆகியவையே நூல், துணி ஏற்றுமதி குறைவுக்குக் காரணம். இதனால் நூல் உற்பத்தியாளர்களும் நெசவாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயத்த ஆடை தயாரிப்போர் பிற ஜவுளித்துறைப் பிரிவுகளோடு ஒப்பிடுகையில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளனர்.

மத்திய பட்ஜெட்டில் ஜவுளிப் பொருள்கள் மீதான விருப்ப சென்வாட் வரி தொடரும் என்று அறிவித்ததாலும், பண்டிகைக் காலம் விரைவில் துவங்குவதாலும், ஜவுளித் தொழிலின் அனைத்துத் துறைகளின் வணிகத்திலும், குறிப்பாக நூல், துணிகளின் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படத் துவங்கியுள்ளது. கடந்த சில மாதங்களாக பஞ்சாலைகளில் நிலவிவந்த பொருளாதார நெருக்கடி, புதிய மத்திய அரசு தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான நிதியின் உதவித்தொகை நிலுவையைத் தரத் துவங்கியுள்ளதால் சற்று சீரடைந்துள்ளது. இந்தியாவில் பருவமழை தாமதமானதால் பருத்தி பயிரிடுவதும் தாமதமானது. இதனால் புதிய பருத்தி வரவு தாமதமாகும். உலகின் பிற பகுதிகளில் குறைந்த விலையுள்ள பஞ்சு இருப்பதாலும், சீனா பஞ்சு இறக்குமதி செய்வதைக் குறைக்க உள்ளதாலும், இந்தியாவில் பஞ்சு விலையில் பெரும்பாலும் பெரிய மாற்றம் இருக்காது. பஞ்சு, நூல் விலையில் வரும் மாதங்களில் ஒரு நிலையான தன்மை இருக்கும். இதன்மூலம் ஜவுளித்துறையின் அனைத்து அங்கங்களும் உலக அளவில் போட்டியிட வசதியாக இருக்கும் என்றார். இந்திய ஜவுளித்துறையை பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகக் கருதி நடவடிக்கை மேற்கொண்டதற்காக, பிரதமர், மத்திய நிதியமைச்சர், மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் ஆகியோருக்கு நன்றியையும் சைமா தலைவர் டி.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

## <u>மேகமலை அருவியில் நீர் வரத்து அதிகரிப்பு</u>

தேனி மாவட்டம், மேகமலை மலைப்பகுதிகளில் பெய்து வரும் சாரல் மழையால் மேகமலை அருவியில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் பெரியகுளம் அருகே கும்பக்கரை அருவி, பாளையம் அருகே சுருளி அருவி மற்றும் கடமலைக்குண்டு அருகே மேகமலை அருவி ஆகியவை உள்ளன. இந்த அருவிகளில் ஆண்டின் பெரும்பாலான நாள்களில் நீர் வரத்து இருக்கும். எனவே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலாப பயணிகள் அதிகளவில் வந்து சென்றனர். கடந்த 2

ஆண்டுகளாக தேனி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் ஆறுகளில் நீர் வரத்து குறைந்து, அருவிகளில் நீர் வரத்து இல்லாமல் காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக தேனி மாவட்டத்தில் ஓரளவு சாரல் மழை

பெய்து வருவதால் அருவிகளில் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. மேலும் வருசநாடு மற்றும் மேகமலைப் பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால் மேகமலை அருவியில் நீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மேலும் இந்த அருவியில் கொட்டும் நீர், மேகமலைப் பகுதியில் காணப்படும் அரியவகை மூலிகைகளுடன் கலந்து வருவதால் பல்வேறு நோய்களை குணப்படுத்தும் என்ற நம்பிக்கையில் மேகமலை அருவிக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு பயிற்சி

கிள்ளியூர் அருகே உள்ள வேங்கோடு பகுதி விவசாயிகளுக்கு பயிர்களைத் தாக்கும் நோய்கள் குறித்த செய்முறைவிளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. கிள்ளியூர் பேரூராட்சிக்குள்பட்ட வேங்கோடு ஏலா,கிள்ளியூர் ஏலா, தொலையாவட்டம்,மாங்கரை உள்ளிட்ட பகுதிகளில் திரளான விவசாயிகள் தென்னை மற்றும் வாழை விவசாயம் செய்து வருகின்றனர். இந்த விவசாயிகளுக்கு பயிர் விளச்சலை மேம்படுத்த, வாழையில் உண்டாகும் வாடல் நோய், தென்னை மரங்களுக்கு ஏற்படும் கேரள வாடல் நோய், காண்டாமிருக வண்டு பாதிப்பு பற்றிய செயல்முறை விளக்கத்தை கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரி மாணவியர் அருள் பிரியா, அருணா, கரிஷ்மா, நித்திக்காராணி, செப்மியா, தீபிகா ஆகியோர் செய்து காட்டினர். மேலும் நோய் பாதிப்பு ஏற்பட்ட பயிர்களை எவ்வாறு அழிப்பது, நோய் வராமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பின், மாணவியருடன் ரப்பர், தென்னை, வாழை விவசாயிகளின் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு வேளாண் கல்லூரி மாணவியர் பதிலளித்தனர். ஏற்பாடுகளை கிள்ளியூர் பேரூராட்சித் தலைவர் ராஜரத்தினம், பாபு ஆகியோர் செய்திருந்தனர்.

## நிரம்புகிறது மேட்டூர் அணை;சில நாட்களில் திறக்க வாய்ப்பு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 88 அடியை எட்டியுள்ளதால் இன்னும் சில நாட்களில் விவசாயத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என நம்பிக்கை தெரிவிக்கும்

விவசாயிகள், நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். மேட்டூர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 88 அடியாக உள்ளது. மேட்டூரின் மொத்த கொள்ளளவு 120 அடியாக இருந்தாலும் 90 அடி அளவுக்கு நிரம்பினால் காவிரி நீரை நம்பி விவசாயம் செய்யும் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கென தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். மேட்டூர் அணையின் தண்ணீர் திறப்பை கருத்தில் கொண்டே டெல்டா விவசாயிகள் குறுவை அல்லது சம்பா பணிகளை தொடங்குவது வழக்கம். குறுவைக்கான காலம் கடந்து விட்டபடியால் சம்பா சாகுபடி பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும் போது அதன் நீரோட்டத்தை பொறுத்து கடைமடை பகுதிகளான திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு சென்றடையும். தற்போது ஆடி பெருக்கை முன்னிட்டு கல்லணை திறக்கப்பட்டு காவிரி ஆற்றில் 1200 அடியும், வெண்ணாற்றில் 200 அடி தண்ணீரும் சென்று கொண்டிருக்கிறது. இதனால் ஆறுகளில் உள்ள நீரோட்டம் காரணமாக கடைமடை பகுதிகளுக்கு 3 நாட்களில் தண்ணீர் கிடைத்து விடும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். முடிக்கப்பட வேண்டிய தூர்வாரும் பணிகள்: தற்போது பொக்லைன் இயந்திரங்கள் மூலம் ஆறு மற்றும் பெரிய வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு வருகின்றன. அத்துடன் தண்ணீர் வரும்போது தங்கு தடையின்றி வருமளவுக்கு இடையூறாக உள்ள காட்டாமணக்கு செடிகள், கோரைப்புல், சிறிய அளவிலான திட்டுகள் ஆகியவையும் அகற்றப்பட்டு வருகின்றன. மேலும் கிராமப்புறங்களில் உள்ள வாய்க்கால்கள் 100 நாள் வேலைத் திட்டத்தின் மூலம் தூர்வாரப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வெங்காயத்தாமரையை அகற்ற வேண்டும்: டெல்டா மாவட்டங்களில் நீர் ஆதாரமாக விளங்குபவை குளங்கள். இன்னமும் சில இடங்களில் உள்ள குளங்களில் தண்ணீர் காணப்படுகிறது. இதன்மூலம் கால்நடைகள் பயனடைந்து வருகின்றன. அதேநேரம் தண்ணீர் முழுவதும் வெங்காயத்தாமரைகள் பரவி காணப்படுகிறது. புதிதாக தண்ணீர் அந்த குளத்தில் விடப்படும்போது வெங்காயத்தாமரை அழியாமல் இருந்தால் அந்த குளம் பயன்பாடற்று போவதுடன், தண்ணீரும் பயனில்லாமல் போய்விடும். சில இடங்களில் தற்போது 100 நாள் வேலைத்திட்டத்தின் மூலம் வெங்காயத் தாமரைகள் அகற்றப்பட்டு வருகின்றன. மற்ற இடங்களில் உடனடியாக அகற்றவும், குளங்களை சீர் செய்யவும் ஊராட்சி நிர்வாகங்களுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கின்றனர்.

## விராலிமலை தொகுதிக்குள்பட்ட விவசாய நிலங்களை சேர்க்க வலியுறுத்தல்

விராலிமலை தொகுதிக்குள்பட்ட விவசாய நிலங்களை காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு பாசனத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசலில் ஒன்றியத் தலைவர் ந. விஜயரெங்கன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றியக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதர தீர்மானங்கள்: குளத்தூர் வட்டம், நார்த்தாமலை பிர்காவை பிரித்து வேறு வட்டத்தில் இணைக்கும் முயற்சியைக் கைவிட்டு, பொதுமக்களின் போக்குவரத்து மற்றும் இதர நலன்களை கருத்தில் கொண்டு குளத்தூர் வட்டத்திலேயே தொடர்ந்து இருக்கச் செய்ய வேண்டும். இலுப்பூர் வட்டப் பகுதிகளில் உள்ள பாசனக் கண்மாய்கள், ஏரிகள், குளங்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டுக்கு அன்னவாசலிலிருந்து தியாகி கே. ரெங்கசாமி நினைவு ஜோதி எடுத்துச் செல்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னதாக, ஒன்றியச் செயலர் கே. கணேசன் வேலை அறிக்கை வாசித்தார். மாவட்டச் செயலர் மு. மாதவன் மாவட்டத்தின் விவசாயிகள் நிலை மற்றும் திருச்சியில் வரும் 16, 17, 18-ம் தேதிகள் நடைபெறும் மாநில மாநாடு குறித்தும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.ஆர். தர்மராஜன் இன்றைய அரசியல் நிலை குறித்தும் பேசினர். சங்கத்தின் மாவட்ட கௌரவத் தலைவர் கே.எஸ். அழகர்சாமி, மாவட்டத் தலைவர் எஸ்.சி. சோமையா, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பி. ராமன், பி. ஆறுமுகம், நாகராஜ், சோலை, கருப்பையா உள்ளிட்டோர் பேசினர்.

## இயந்திர அறுவடைப் பணிக்கு விவசாயத் தொழிலாளர்கள் எதிர்ப்பு

குத்தாலம் வட்டம், கொழையூர் கிராமத்தில் இயந்திரம் மூலம் அறுவடைப் பணிகள் மேற்கொள்ள விவசாய கூலித் தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதால், இப்பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் மயிலாடுதுறை சார் ஆட்சியரிடம் புகார் தெரிவித்தனர். கொழையூர் கிராமத்தில் 500-க்கு மேற்பட்ட ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில், நெல் அறுவடைக்கு இயந்திரத்தை பயன்படுத்தக் கூடாது என விவசாய கூலித் தொழிலாளர்கள் விவசாயிகளிடம் கோரி வந்தனர். இதில் இருதரப்புக்கும் இடையே பிரச்னை உள்ளது. இந்நிலையில், அகில இந்திய விவசாய சங்க கூட்டமைப்பின் நாகை மாவட்டத்

தலைவர் எஸ். சண்முகநாதன் தலைமையில் ஒன்றிணைந்த கொழையூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் 20-க்கு மேற்பட்டோர், திங்கள்கிழமை மயிலாடுதுறை சார் ஆட்சியரிடம் இந்த பிரச்னைத் தொடர்பாக மனு அளித்தனர். இதுதொடர்பாக இரு தரப்பினரும் பங்கேற்கும் பேச்சுவார்த்தை புதன்கிழமை நடத்தப்படும் என சார்ஆட்சியர் கூறியதையடுத்து விவசாயிகள் கலைந்து சென்றனர்.

## பண்ணைக் குட்டையில் மீன்வளர்ப்பு: ஆட்சியர் ஆய்வு

நாகை மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பண்ணைக் குட்டைகளில் நடைபெறும் மீன் வளர்ப்புப் பணிகளை ஆட்சியர் து. முனுசாமி திங்கள்கிழமை ஆய்வு செய்தார். 2013-ம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டைகள் அமைக்க அரசு உத்தரவிட்டதன்படி, நாகை மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட பகுதிகளில் 27 பல்நோக்குப் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டன. இந்தப் பண்ணைக் குட்டைகளில் 14,850 மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், வானாதிராஜபுரத்தில் முத்தலீப், ராஜசேகரன் ஆகியோர் அமைத்துள்ள பண்ணைக் குட்டைகளில், மீன் வளர்ப்புப் பணிகளை ஆட்சியர் து. முனுசாமி திங்கள்கிழமை ஆய்வு செய்தார். இந்தப் பண்ணைக் குட்டைகளிலிருந்து சோதனை அடிப்படை யில் மீன்கள் பிடிக்கப்பட்டு, அவற்றின் எடைகள் பரிசோதிக்கப் பட்டன. மீன்வளத் துறை மூலம் வழங்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட தீவன விவரங்கள் உள்ளிட்டவைகளை ஆட்சியர் கேட்டறிந்தார். பண்ணைக் குட்டை மீன் வளர்ப்பு மூலம் சுமார் 20 ஆயிரம் முதல் ரூ. 25 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும் எனவும், இதன் மூலம் சுமார் ரூ. 10 ஆயிரம் வரை உபரி லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது எனவும் மீன்வளர்ப்பு விவசாயிகள் ஆட்சியரிடம் தெரிவித்தனர்.

## "அடுத்த 24 மணி நேரத்தில் கர்நாடகத்தில் பலத்த மழை பெய்யும் '

அடுத்த 24 மணி நேரத்தில் கர்நாடகத்தில் பரவலாக பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது என்று பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இது குறித்து பெங்களூரு வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை ஞாயிற்றுக்கிழமை மாலை வங்காள விரிகுடாவின் வடமேற்கு பகுதியில் மையம் கொண்டிருந்தது. குறைந்த

காற்றழுத்தம் திங்கள்கிழமை நிலப் பகுதிகளுக்குள் நகர்ந்து மேற்கு வங்கம், இதரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் இது வடமேற்கில் நகரும். இந்த நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர கர்நாடகத்தில் தீவிரமடைந்துள்ள தென்மேற்கு பருவ மழை, வடகர்நாடகத்தில் திங்கள்கிழமை பலவீனமடைந்திருந்தது. தென் கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் மழை பெய்தது. அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. வட கர்நாடகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் பலத்த மழை பெய்யும். அடுத்த 72 மணி நேரத்தில் இந்தப் பகுதிகளில் பலத்த மழை பெய்யக்கூடும். மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்தில் மேற்கு நோக்கி கடல் காற்று வீசும் வாய்ப்புள்ளது. எனவே, மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கிருஷ்ணா நீர் தமிழகம் வந்தது</u>**

ஊத்துக்கோட்டை : கண்டலேரி அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், இன்று காலை 6 மணிக்கு தமிழக எல்லையான ஊத்துக்கோட்டையை அடைந்தது.

**<u>வேகமாக நிரம்புகிறது மேட்டூர் அணை</u>**

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவு 37 கனஅடியில் இருந்து, இன்று 42,347 கனஅடியாக அதிகரித்துள்ளதை அடுத்து நேற்று 87 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று 90.19 அடியாக அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு நாட்களில் அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்துள்ளது. அணையின் நீர்இருப்பு 52.88

டி.எம்.சி.,யாக உள்ள நிலையில், அணையின் இருந்து குடிநீருக்காக 800 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.



**யூரியா இறக்குமதி 18 சதவீதம் சரிவு**

டில்லி: நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாத காலத்தில் (ஏப்., – ஜூலை), நாட்டின் யூரியா இறக்குமதி, 18 சதவீதம் சரிவடைந்து, 16.65 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.கடந்தாண்டின் இதே காலத்தில், யூரியா இறக்குமதி, 20.30 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது. பயிரிடும் பரப்பு சரிவடைந்தது மற்றும் பருவமழை சராசரிக்கும் குறைவாகவே இருக்கும் என்ற மதிப்பீடு போன்றவற்றால், நடப்பாண்டில் யூரியா இறக்குமதி சரிவை கண்டுள்ளது.ஜூலை 25ம் தேதி நிலவரப்படி, கரீப் பருவ சாகுபடி பரப்பு, 27 சதவீதம் சரிவடைந்து, 5.33 கோடி ஹெக்டேராக வீழ்ச்சி கண்டுள்ளது. உள்நாட்டில் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி இல்லாததால், யூரியாவை, அரசின் முகமை அமைப்புகளான, இந்தியன் பொட்டாஷ், எம்.எம்.டி.சி மற்றும் எஸ்.டி.சி., ஆகிய மூன்று நிறுவனங்கள் இறக்குமதி செய்கின்றன.உள்நாட்டில் யூரியாவிற்கான தேவை, ஆண்டுக்கு, 3 கோடி டன்னாக உள்ள நிலையில், அதன் உற்பத்தி, 2.20 கோடி டன் அளவிற்கே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**பல கோடி ரூபாய் தேயிலை தூள் தேக்கம் : பசுந்தேயிலை விலை நாளுக்கு நாள் வீழ்ச்சி**



ஊட்டி: நீலகிரி தேயிலை தூளை வாங்க, ஏற்றுமதி வர்த்தகர்கள் ஆர்வம் காட்டாததால், பல கோடி ரூபாய் மதிப்பிலான தேயிலை தூள் தேக்கம்

அடைந்துள்ளது. இதன் விளைவாக, பசுந்தேயிலை விலை நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டு வருகிறது.ஆர்வம் இல்லைநீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தேயிலை துாள், ரஷ்யா, பாகிஸ்தான், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.சமீப காலமாக, நீலகிரி தேயிலை கொள்முதலில் ஏற்றுமதி வர்த்தகர்கள் அதிகம் ஆர்வம் காட்டாமல், கென்யா, இலங்கை நாடுகளில் இருந்து அதிகளவு தேயிலை துாளை கொள்முதல் செய்கின்றனர். குன்னுார் தேயிலை ஏல மையத்தில், தேயிலை துாள் ஏல விலை கணிசமாக குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக ஏலத்தில் விற்கப்பட்ட ஒரு கிலோ தேயிலை துாளின் சராசரி விலை, 66.71 ரூபாயாக சரிவடைந்துள்ளது. கடந்தாண்டின் இதே காலத்தில், இதன் சராசரி விலை, 85.54 ரூபாயாக உயர்ந்து காணப்பட்டது.ஏலத்தில் விற்கப்படும் தேயிலை துாளின் விலையை அடிப்படையாக வைத்து தான், விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.வாரந்தோறும் ஏலத்துக்கு வரும் தேயிலை துாளில், 40 சதவீதத்திற்கு மேல் தேக்கமடைகிறது. கடந்த நான்கு வாரங்கள் நடந்த ஏலத்தில், முறையே 3.46 கோடி ரூபாய், 3.66, 8.84, 5.20 கோடி ரூபாய் என, கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 20 கோடி ரூபாய் மதிப்பிலான தேயிலை துாள் தேக்கமடைந்துள்ளது.மறு ஏலம்அந்த தேயிலை துாள், அடுத்தடுத்து வரும் ஏலத்தில் விற்கப்படுகிறது. மறு ஏலத்துக்கு வரும் தேயிலை துாளை, வர்த்தகர்கள் கூடுதல் விலை கொடுத்து வாங்குவதில்லை.எனவே, நீலகிரி தேயிலைக்கான உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையை மேம்படுத்தினால் மட்டுமே, நீலகிரி தேயிலை தொழிலின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என, இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்து உள்ளனர்.

## <u>என் மரம்.. என் உரிமை...!</u>

பல அடிகள் தோண்டினால் கூட ஒரு சொட்டு தண்ணீர் தலை காட்டுவதில்லை. மண் வளத்தை பாதுகாத்து, நிலத்தடி நீரை பெருக்கச் செய்யும் மரங்களை வெட்டி வீழ்த்தினால் எப்படி தண்ணீர் வரும். ஒவ்வொரு மனிதனும் மரங்களின்

மகத்துவத்தை புரிந்து, 'என் மரம் என் உரிமை' என்ற, எண்ணத்துடன் மரம் வளர்க்க முன்வர வேண்டும். மரம் வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்த 'மரம் மதுரை' அமைப்பினர் வீடு வீடாக தேடி சென்று விழிப்புணர்வு ஏற்படுத்து கின்றனர்.அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரசாந்த் கூறியதாவது: வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற இலக்குடன் மரங்களை நடுகிறோம். முறையாக தண்ணீர் ஊற்றி பராமரிக்காததால் அவை பட்டு விடுகின்றன. மரங்களை பாதுகாக்கவும், தொடர்ந்து வளர்க்கவும் ஒவ்வொரு தெருவிலும் மரங்களை நட்டு அதற்கு ஒரு பொறுப்பாளரை நியமிக்கிறோம். அவர் தினமும் மரங்களை பராமரிப்பதில் ஈடுபடுவார். மதுரையில் உள்ள மரங்களின் பெயர்கள், பயன்களை மக்களுக்கு தெரியப்படுத்தி மரம் வளர்க்கும் ஆர்வத்தையும், சீமை கருவேல மரங்களை வெட்டி, அதற்கு பதில் அந்த இடத்தில் நல்ல மரங்களை நட்டு வளர்க்கவும் தூண்டுகிறோம். 'கிரீன் கேம்பஸ்' திட்டம் மூலம் 30 கல்லுாரிகளில் மரம் வளர்க்கும் மாணவர் குழுக்களை உருவாக்கியுள்ளோம், என்றார். தொடர்புக்கு: 86430 50002.

## அதிர்ச்சி! : தென்னையில் ஈரியோஃபைட் தாக்குதலால்... : இலவச மருந்து வழங்க விவசாயிகள் கோரிக்கை

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போன நிலையில், தென்னையை அதிக அளவில் ஈரியோஃபைட் நோய் தாக்கி வருவதால் விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர். நோயை கட்டுப்படுத்தும் "அசாடிராக்சின்' மருந்தை, தென்னை விவசாயிகளுக்கு, தமிழக அரசு இலவசமாக வழங்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்றுப்படுகை பகுதிகளான காவேரிப்பட்டணம், மாதேப்பட்டி, நெடுங்கல், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில், அதிக அளவில் தென்னை மரங்கள் உள்ளது. மேலும், மாவட்டம் முழுவதும், மொத்தம், 20 லட்சத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது. கடந்த, 15 ஆண்டுக்கு முன் மாவட்டத்தில் உள்ள தென்னை மரங்களில், ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டது. நோய் தாக்கிய மரங்களில், தேங்காய்களின் பருமன் குறைந்து, கடும்

விலை வீழ்ச்சி அடைந்தது. நோயை கட்டுப்படுத்த, மரங்களுக்கு வேர் மூலம் செலுத்தப்படும் "அசாடிராக்சின்' என்ற மருந்து, அப்போது விவசாயிகளுக்கு அரசு இலவசமாக வழங்கியது. இதனால், விவசாயிகள் அனைவரும் தவறாமல் மருந்தை பெற்று, ஒரே நேரத்தில் தென்னை மரங்களில் வேர்களில் கட்டி விட்டனர். இதனை தொடர்ந்து, நோய் தாக்குதல் ஓரளவுக்கு கட்டுக்குள் வந்தது. இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக தென்னையில் மீண்டும் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டது. நோயை கட்டுப்படுத்தும், அசாடிராக்சின் மருந்தை அரசு இலவசமாக வழங்குவதை நிறுத்திவிட்டு, 50 சதவீத மானியத்தில் வழங்கியது. ஒரு லிட்டர் அசாடிராக்சின் மருந்தின் விலை, 700 ரூபாய் ஆகும். விலை அதிகமாக இருந்த காரணத்தால், பல விவசாயிகள் இந்த மருந்தை வாங்க ஆர்வம் காட்டவில்லை. மேலும், ஒரு சில விவசாயிகள் மட்டும் இந்த மருந்தை வாங்கி தோட்டங்களில் உபயோகித்தனர். பொதுவாக, காற்றில் பரவும் ஈரியோஃபைட் நோய், ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாட்டு முறைகளை, அனைத்து விவசாயிகளும் சேர்ந்து செய்தால் தான் நோய் கட்டுக்குள் வரும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போன நிலையில், பல இடங்களில் மீண்டும் ஈரியோஃபைட் நோயின் தாக்குதல் அதிகரித்து, தென்னை மரங்கள் அழிந்து வருகிறது. எனவே, நோயை கட்டுப்படுத்த, தமிழக அரசு தென்னை விவசாயிகளுக்கு, "அசாடிராக்சின்' மருந்தை இலவசமாக வழங்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மாற்றம்! : பாசன தண்ணீர் பற்றாக்குறையால்... : சூரியகாந்தி சாகுபடி செய்ய ஆர்வம்

திருச்சி: காவிரியாற்றில் தண்ணீர் திறந்து விடாததாலும், கடந்த, இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை பெய்யாததாலும், திருச்சி சுற்று வட்டார விவசாயிகள் மாற்றுப்பயிர் சாகுபடிக்கு மாறியுள்ளனர். தமிழகத்தில், 65 சதவீத விவசாய பணிகள் மற்றும் குடிநீருக்கு காவிரி ஆற்றை நம்பியிருக்கும் நிலை உள்ளது. இந்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக, தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை.

நிலத்தடி நீர் பாதாளத்துக்கு சென்று விட்டதால், கிணற்று பாசன விவசாயிகள் கூட, பயிர் சாகுபடி செய்ய முடியாமல் தடுமாறினர். பல ஆயிரம் ரூபாய் செலவில் போடப்பட்ட போர்வெல்களில் கூட, தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மேட்டூர் அணையில் மிகவும் குறைவான தண்ணீர் இருந்ததால், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால், தமிழகத்தில் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது. நெல், கரும்பு மற்றும் வாழை போன்ற பயிர்களுக்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படும் என்பதால், விவசாயிகள் குறைந்த நாளில் அறுவடையாகும் பயிர்களை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். திருச்சி சுற்று வட்டார பகுதிகளில், சூரியகாந்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது குறித்து புலியூரை சேர்ந்த விவசாயி நாகராஜன் கூறியதாவது:

பணப்பயிர்களான நெல், கரும்பு, வாழை ஆகியவற்றுக்கு அதிக தண்ணீர் தேவை. ஆனால், எள், சூரியகாந்தி மற்றும் பல்வேறு பூக்கள் சாகுபடிக்கு தண்ணீர் தேவையும், சாகுபடி செலவும் குறைவு தான். ஒரு ஏக்கர் சூரியகாந்தி சாகுபடிக்கு அதிகபட்சமாக, 5,000 ரூபாய் வரை செல வாகிறது. 90 நாளில் சூரியகாந்தி பூக்கள் அறுவடைக்கு தயாரிகி விடும். ஒரு கிலோ விதைக்கு, 35 ரூபாயில் இருந்து, 40 ரூபாய் வரை கிடைக்கும். கொழுப்பு சதவீதம் குறைவாக உள்ள சூரிய காந்தி எண்ணெய் தற்போது, சமையலில் அதிகம் பயன்படுத்த படுகிறது. இதனால், குறைந்த தண்ணீர், குறைந்த சாகுபடி செலவில் வளரக்கூடிய சூரியகாந்தி சாகுபடி எதிர்க்காலத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது, என்றார். சமீப காலமாக, சூரியகாந்தி செடியில் பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. இது குறித்து, விவசாய துறை அதிகாரிகளிடம், புகார் செய்தால், சம்பந்தப்பட்ட இடத்துக்கு அதிகாரிகள் வருவதில்லை, என்ற புகார் எழுந்துள்ளது. சூரியகாந்தி சாகுபடி குறித்து, வேளாண்மை துறை அதிகாரிகள் கூறியதாவது: திருச்சி மாவட்டத்தில், தாத்தையாங்கர்பேட்டை, தொட்டி யம், நச்சலூர் மற்றும் ஸ்ரீரங்கம் சுற்று வட்டாரத்தில், 750 முதல், 1, 000 ஏக்கர் வரை சூரியகாந்தி சாகுபடி செய்யப்படுகிறது. ஜூன், ஜூலை மாதங்களில், அதிகளவில் சாகுபடி பணிகள் துவங்கும். சூரியகாந்தி விதை, மான்ய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. குறைந்த அளவு தண்ணீர் தேவை உள்ள சூரியகாந்தி

சாகுபடியை, விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால், மயில் போன்ற பறவையினங்களால் பயிர்கள் சேதமடைவதாக புகார் வருகிறது. சூரியகாந்தி மட்டுமின்றி அனைத்து வகையான பயிர்களிலும் நோய் பாதிப்பை கண்டறிந்து, தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்றனர்.

**<u>தரமான விதைகள் உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி</u>**

திருத்தணி : விவசாயிகள், தரமான விதைகள் தயார் செய்வது எப்படி என்பது குறித்து, 1000 விவசாயிகளுக்கு, ஊக்கத் தொகையுடன், மூன்று நாள் பயிற்சி நடத்தப்படுகிறது. திருத்தணி ஒன்றியத்தில், உள்ள விவசாயிகள் தரமான நெல், வேர்க்கடலை மற்றும் பயறு வகைகள் போன்ற விதைகளை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது குறித்து, விவசாயிகளுக்கு, ஊக்கத் தொகையுடன், 10 கிராமங்களை வேளாண்மை துறையினர் தேர்வு செய்து, ஒரு கிராமத்திற்கு, 100 விவசாயிகள் வீதம், மூன்று நாள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இது குறித்து, திருத்தணி வேளாண்மை உதவி இயக்குனர் பிரசாத் கூறியதாவது: ஒன்றியத்தில் உள்ள, சின்னக்கடம்பூர், அகூர், வேலஞ்சேரி, மத்துார், முருக்கம்பட்டு, ருக்மணிபுரம். மாம்பாக்கம், வி.கே.என்., கண்டிகை, டி.புதுார் மற்றும் விநாயகபுரம் ஆகிய 10 கிராமங்களில், தலா 100 விவசாயிகளுக்கு தரமான விதைகள் உற்பத்தி செய்வது, எவ்வாறு பயிரிடுவது என்பது குறித்து, மூன்று நாட்கள் பயிற்சி அந்தந்த கிராமத்திற்கு நேரில் சென்று அளிக்கிறோம்.வேளாண் இணை இயக்குனர், விதைச் சான்று வேளாண் உதவி இயக்குனர் மற்றும் ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் ஆகியோரால் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி யில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு 35 ரூபாய் வீதம், மூன்று நாட்களுக்கு 105 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும். இந்த பயிற்சி, இம்மாதம் இரண்டாவது வாரத்தில் துவங்கி, இம் மாதம் முழுவதும் நடைபெறும்.இவ்வாறு அவர் கூறினார்.

## <u>உற்பத்தி அதிகரிப்பால் சாத்துக்குடி விலை சரிவு</u>

சேலம்: சாத்துக்குடி உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை, அனைத்து தரப்பினரும், சாத்துக்குடி பழம் மற்றும் ஜூஸ் ஆகியவற்றை அதிகம் விரும்புவது வழக்கம். உற்பத்தி, இறக்குமதி ஆகியவற்றை பொறுத்தே, அதன் விலை நிர்ணயம் செய்யப்படுகிது. சேலத்துக்கு, ஆந்திரா மாநிலம் கடப்பாவில் இருந்து, அதிகளவு சாத்துக்குடி பழம் இறக்குமதி செய்யப்படுகிறது. கடந்த வாரம், சாத்துக்குடி முதல் ரகம், 90 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம் கிலோ, 80 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம், சேலம் பழ மார்க்கெட்டுக்கு, மூன்று டன் பழம் மட்டுமே, ஆந்திராவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அங்கு, விளைச்சல் குறைவாக இருந்ததே, இதற்கு காரணம். இந்நிலையில், ஆந்திராவில், தொடர் மழை பெய்து வருகிறது. அதனால், சாத்துக்குடி விளைச்சல் அதிகரித்துள்ளது. அதையடுத்து, இந்த வாரம், சேலம் பழ மார்க்கெட்டுக்கு, ஆறு டன் பழம் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதி அதிகரிப்பால், இந்த வாரம், ஒரு கிலோ சாத்துக்குடி, முதல் ரகம், 70 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 50 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. வரத்து அதிகரிக்கும் பட்சத்தில், மேலும் விலை குறைய வாய்ப்புள்ளதாக, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## <u>முட்டை விலை 275 காசாக உயர்வு</u>

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 275 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 270 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு அதிகரித்து, 275 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 305, பெங்களூரு, 290, மைசூர்,

297, ஹைதராபாத், 273, மும்பை, 313, விஜயவாடா, 280, கொல்கத்தா, 330, பர்வாலா, 277, டில்லி, 298. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, ஒரு கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 89 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## <u>விவசாயிகள் தோட்டத்தில் வேளாண் அதிகாரி ஆய்வு</u>

ராசிபுரம்: நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தமிழ்ச்செல்வன், வெண்ணந்தூர் வட்டார விவசாயிகளின் தோட்டங்களை ஆய்வு செய்தார்.
வெண்ணந்தூர் வட்டார வேளாண் மற்றும் வேளாண் தொழில் நுட்ப மேலாண் முகமை திட்டம், நீர்வடிப்பகுதி திட்ட செயல்பாடு குறித்து, நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தமிழ்செல்வன், விவசாயிகளின் தோட்டத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டார். அதில், நடுப்பட்டி கிராமத்தில், வட்டார பட்டு வளர்ப்பு விவசாயிகள் குழு செயல்பாடு, வங்கி கணக்கு மற்றும் தீர்மான பதிவேட்டை ஆய்வு செய்தார். விவசாயி கணேசன் என்பவர் தோட்டத்தில், தேனீ வளர்ப்பு முறையை பார்வையிட்டார். தொடர்ந்து, நீர் பிடிப்புப் பகுதியில், ஓடை தூர் எடுத்தல், பண்ணைகுட்டை, தடுப்பு அணை அமைத்தல் பணிகளை பார்வையிட்டார். வெண்ணந்தூர் வேளாண் உதவி இயக்குனர் சீனிவாசன், வேளாண் அலுவலர் வசுமதி, துணை வேளாண் அலுவலர் பசுபதி, உதவி விதை அலுவலர் சுப்ரமணியம், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆரோக்கியசாமி, சக்திவேல், கருப்புசாமி, அந்தோணிசாமி, மேகலா மற்றும் விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## <u>கூடலூர் விவசாயிகளுக்கு மாணவிகள் ஆலோசனை</u>

கூடலூர்: திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய நான்காம் ஆண்டு மாணவிகள், கிராமப்புற தோட்டக்கலை பணி அனுபவத்திட்டத்தில் பயற்சி பெற்று வருகின்றனர். இதில், கூடலூர் பகுதியில்

உள்ள தோட்ட விவசாய நிலங்களுக்கு சென்று, ஆலோசனை வழங்கினர். கூடலூர் தம்மனம்பட்டியில், மிளகாய் விவசாயத்தில் வைரஸ் நோய் தாக்கம் அதிகமாக இருக்கிறது. இதற்கு மஞ்சள் ஒட்டு பொறியின் மூலம், வைரசை பரப்புகின்ற வெள்ளை ஈக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தலாம். மேலும் தக்காளியில் அதிக சேதத்தை விளைவிக்கும் பச்சை காய்ப்புழுவை கட்டுப்படுத்தும், இனக்கவர்ச்சி பொறி என்ற கருவிகளைப் பற்றியும், அதனை கையாளும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு மாணவிகள் ஆலோசனை வழங்கினர். கல்லூரி மாணவிகள் வினோதா, திவ்யபாரதி, இந்துமதி, சாவித்திரி, சாந்தகுமாரி, ஸ்ரீநிவி, கலையரசி ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>முல்லைப் பெரியாறு அணை நிரம்புகிறது</u>**



திருவனந்தபுரம்: கேரளாவில் கடந்த சில வாரங்களாக ஓய்ந்திருந்த பருவமழை மீண்டும் பெய்ய தொடங்கி உள்ளது. கடந்த ஜூலை 31ம் தேதி முதல் திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா, பாலக்காடு, இடுக்கி, வயநாடு, கண்ணூர், காசர்கோடு உள்பட அனைத்து மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் பல மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்துள்ளது. பெரும்பாலான ஆறுகளில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. இடுக்கி, முல்லைப் பெரியாறு உள்பட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

## <u>உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம்</u>

## <u>இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு ஐநா வேளாண் அமைப்பு ஆதரவு</u>




புதுடெல்லி: உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஐ.நா.வின் வேளாண் அமைப்பான வேளாண் வளர்ச்சிக்கான சர்வதேச நிதியம் ஆதரவு தெரிவித்துள்ளது. உள்நாட்டில் உள்ளவர்களுக்கு உணவு கிடைப்பதை உறுதி செய்யாமல், மற்றொரு நாட்டில் வேலை வாய்ப்பை உருவாக்க எந்த அரசும் விரும்பாது என்று நதியத்தின் தலைவர்

கனாயோ நுவான்சே தெரிவித்தார். வளரும் நாடுகளில் வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கான, வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கும் ஐ.நா.வின் அமைப்பாகும் இந்த நிதியம். 5 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள நுவான்சே, டெல்லியில் நிருபர்களிடம் நேற்று கூறியதாவது: உள்நாட்டில் உள்ளவர்களுக்கு உணவு அளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். மக்கள் பசியுடன் இருக்கும்போது, மற்றொரு நாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்க எந்தஅரசும் விரும்பாது. அந்த நோக்கத்துடன்தான், உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்துள்ளது என்றார் நுவான்சே. நிதியத்தின் இந்தியப் பிரிவு தலைவர் நைஜல் பிரெட் கூறுகையில், 120 கோடி மக்களுக்கு உணவு அளிப்பது மிகப் பெரிய சவாலாகும். இந்த மக்களுக்கு சரியான உணவு கிடைப்பதை உறுதி செய்யவே இந்தியா இந்த முடிவு எடுத்துள்ளது பாராட்டுக்கு உரியதாகும் என்றார். உலக வர்த்தக அமைப்பின் கீழ், உலக அளவில் வர்த்தகத்தை பரவலாக்க, வர்த்தக மேம்பாடு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1986-88ம் ஆண்டு விலைவாசியின் அடிப்படையில் வேளாண்மை உற்பத்தியின் மதிப்பில் 10 சதவீதத்துக்கு குறைவாகவே உணவு மானியம் இருக்க வேண்டும் என்று ஒப்பந்தம் கூறுகிறது. மானியத் தொகையை நிர்ணயிக்கும் காலத்தை மாற்றி அமைக்க வேண்டும். பணத்தின் மதிப்பு, பொருளாதார மந்தநிலை உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு இதை மாற்ற வேண்டும் என்று இந்தியா கோருகிறது. உணவு பாதுகாப்பு சட்டத்தை இந்தியா நடைமுறைபடுத்த உள்ளது. அதன்படி கணக்கிட்டால், மானியத்தின் அளவு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள 10 சதவீதத்துக்கும் அதிகமாக வரும். இது குறித்து உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் எதிர்காலத்தில் பிரச்னை எழுப்பினால், இந்தியா மீது மிகப் பெரிய அளவுக்கு அபராதம் விதிக்க முடியும். அதையடுத்தே, ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று இந்தியா கோரி வருகிறது. இதையடுத்து ஜுலை 31ம் தேதி கையெழுத்தாக வேண்டிய ஒப்பந்தம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

## ரூ.46 கோடி செலவில் பால் பண்ணைகளுக்கு புதிய இயந்திரங்கள்: ஜெயலலிதா அறிவிப்பு

பேரவையில் பால் பண்ணைகளுக்கு புதிய இயந்திரம் மற்றும் கால்நடை தீவன பயன்பாட்டை ஊக்கப்படுத்தும் பணிகள் ரூ.46 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என்று ஜெயலலிதா கூறினார். பேரவையில் நேற்று முதல்வர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையில் கூறி இருப்பதாவது:

* சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களின் இயந்திர தளவாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய பால் குளிரூட்டும் இயந்திரங்கள், பால் கொள்கலன்கள், பாட்டில்களில் நெய் நிரப்பும் தானியங்கி இயந்திரம், மின்ஆக்கி, பால் பதப்படுத்தும் இயந்திரங்கள், கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரங்கள், பால் சமன்படுத்தும் இயந்திரங்கள், பிளாஸ்டிக் டப்புகள் சுத்தம் செய்யும் இயந்திரங்கள், பால் பாக்கெட்டுகள் மீது, உரிய விவரங்களை அச்சிடும் வெப்பமாற்று முறை உபகரணங்கள் ஆகியவை ரூ.35 கோடியே 77 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன்மூலம் சுமார் 2 லட்சத்து 26 ஆயிரத்து 432 பால் உற்பத்தியாளர்களும், 5 லட்சத்து 13 ஆயிரத்து 138 பால் நுகர்வோர்களும் பயனடைவார்கள்.
* ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் தீவன தொழிற்சாலை ரூ.10 கோடியே 73 லட்சம் செலவில் விரிவாக்கப்பட்டு, தீவன உற்பத்தி திறன் நாளொன்றுக்கு 150 டன் என்ற அளவிற்கு உயர்த்தப்படும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

## போச்சம்பள்ளியில் அவரை கிலோ ரூ40க்கு விற்பனை

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் அவரை கிலோ ரூ40க்கு விற்பனைசெய்யப்பட்டது. போச்சம்பள்ளி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் பருவ மழை தவறியதால், விவசாயிகள் குறைந்த அளவு தண்ணீரை கொண்டு

அவரையை பயிரிட்டனர். கடந்த சில தினங்களுக்கு முன், ஒரு கிலோ அவரைக்காய் ரூ25க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது விலை உயர்ந்து கிலோ ரூ40க்கு விற்பனை செய்யப்படுகிறது. நல்ல வருவாய் கிடைப்பதால், அவரைக்காயை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## <u>விவசாய தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ3,000 வழங்க வேண்டும்மாவட்டக்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்</u>

தஞ்சை, : விவசாய தொழிலாளர்கள், சிறு மற் றும் குறு விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி மாத ஓய்வூதியம் ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டு மென தமிழ் மாநில விவ சாய தொழிலாளர் சங்க மாவட்டக்குழுவில் வலியுறுத்தப்பட்டது. தஞ்சையில் தமிழ் மாநில விவசாய தொழி லாளர் சங்க மாவட்டக்குழு கூட்டம் நேற்று நடந்தது. மாவட்ட தலைவர் கிருஷ் ணன் தலைமை வகித்தார். செயலாளர் பக்கிரிசாமி வேலை அறிக்கை சமர்ப்பித்தார். கூட்ட முடிவில் அவர் கள் கூறியதாவது: ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.167 சம்பளத்தை அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் அமல்படுத்த வேண்டும். தொழிலாளர் தினசரி ஊதியத்தை வங்கி யில் உடனுக்குடன் செலுத்தாமல் மாத கணக்கில் கிடப்பில் போடும் போ க்கை கைவிட வேண்டும். இதற்கு காரணமான அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையான ஊதியம் வார வாரம் கிடைக்க செய்ய வேண்டும். இந்த திட்டத்தின்கீழ் வேலை நாட்களை 200 ஆக உயர்த்தி குறைந்தபட்ச ஊதியம் ரூ.300ஆக நிர்ணயம் செய்ய வேண் டும். வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநா தன் குழு பரிந்துரையின் படி விவசாய விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். விவ சாய தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளு க்கு நிபந்தனையின்றி மாத ஓய்வூதியம் ரூ.3 ஆயிரம் வழங்க வேண் டும். இது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 17ம் தேதி ஈரோட்டில் 11வது மாநில மாநாடு துவங்கி வரும் 19ம் தேதி வரை 3 நாட்களுக்கு நடக்கிறது. இதில் இந்திய விவசாய தொழிலாளர் சங்க பொது செயலாளர் நாகேந்திரநாத்ஓசா,

இந்திய விவசாய தொழிலாளர் சங்க தலை வரும், கேரளா மாநில முன் னாள் வருவாய்த்துறை அமைச்சருமான இஸ்மா யில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தா.பாண்டியன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் நல்லக்கண்ணு, தேசியக் குழு உறுப்பினர் ஸ்டாலின் குணசேகரன், ஏஐடியூசி மாநில தலைவர் சுப்பரா யன் மற்றும் பலர் பேசுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**<u>வங்கி செயலர்களின் பணிகள் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு தூண்டுகோலாக இருக்க வேண்டும்பயிற்சி முகாமில் வலியுறுத்தல்</u>**

திருவாரூர், : விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு தூண்டுகோலாக வங்கி செயலர்கள் பணியாற்ற வேண்டும் என்று கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட உள்ள சம்பா சாகுபடிக்காக விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவது குறித்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலர்களுக்கான பயிற்சி முகாம் திருவாரூர் கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டுறவு துறை சார்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் கலெக்டர் மதிவாணன், கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் ரவிச்சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகனன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர். முகாமினை துவக்கி வைத்து கலெக்டர் மதிவாணன்பேசியதாவது, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மிக அதிகநெல் உற்பத்தியினை திருவாரூர் மாவட்ட விவசாயிகள் செய்து வருவது பாரட்டிற்குரியது. எனவே விவசாயிகளின் தேவை அறிந்து அவர்களுக்கு உதவி செய்வது கூட்டுறவு வங்கி செயலர்களின் பணியாகும். விவசாயிகளுக்கு செய்யும் பணி நமது நாட்டிற்கு செய்யும் பணியாகும். விதையும் தானியமும் ஒன்றுதான் என்றாலும் தானியத்தினை வேக வைத்து சாப்பிடுவதை போன்று விதையினை சாப்பிட முடியாது. விதை என்பது மண்ணில் விதைக்கப்பட்டு அதன் மூலம் விவசாயிகள் முன்னேற்ற பாதையில் செல்ல வழிவகுக்கும். அந்த விதை போல விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனும் இருக்க வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் ஆப்ரேட்டிவ் என்பது விவசாயிகள் தான். செயலர்களான நீங்கள் அதனை

கோஆப்பரேட்டிவ் மட்டும் தான் செய்ய வேண்டும். எனவே கடன்கள் வழங்கப்படும் போது அதனை சரிவர யார் திரும்ப செலுத்துவார்கள் என்பது உங்களுக்கு தெரியும் என்பதால் அந்த நபர்களை அலைகளிக்காமல் விரைவில் கடன்களை வழங்கினால் தான் அவர்கள் அதனை முகம் சுளிக்காமல் திரும்ப கட்டுவார்கள். எனவே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி என்பது விவசாயிகளின் வங்கி என்றும் இதில் உள்ள தொகைகள் விவசாயிகளுடையதுதான் என்பதனை அவர்களுக்கு உணர வைத்து அவர்களின் தேவைக்கான கடன்களை வழங்கி அவர்களது முன்னேற்றத்திற்கு தூண்டுதலாக இருக்க வேண்டும் என்றார்.

**திருவாரூர் மாவட்டத்தில் 62 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி கலெக்டர் தகவல்**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் 62 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்திற்காக தமிழக அரசு ரூ.10 கோடியினை ஒதுக்கி உள்ளது. அதன்படி முழு வீச்சில் சாகுபடி பணிகள் நடைபெற்று முடிந்துள்ளன. மாவட்டத்தில் 62 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு கூடுதலாக 67 ஏக்கர் என மொத்தம் 62 ஆயிரத்து 67 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் நேரடி விதைப்பு மூலம் 845 ஏக்கரும், திருந்திய நெல் சாகுபடி முறையில் 47 ஆயிரத்து 630 ஏக்கரும், இயல்பான நடவு முறையில் 13 ஆயிரத்து 592 ஏக்கர் என மொத்தம் 62 ஆயிரத்து 67 ஏக்கரில் குறுவை சாகுபடிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இதேபோல் மாவட்டத்தில் சம்பா சாகுபடி 3 லட்சத்து 67ஆயிரத்து 750 ஏக்கரிலும், கோடைநெல் சாகுபடியாக 24 ஆயிரத்து 750 ஏக்கரிலும் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வேளாண்மை துறையில் சான்றுபெற்ற விதைகள் 815 மெ.டன்களும், தனியார் விதை விற்பனை நிலையங்களில் 1210 மெ.டன் விதைகளும் என மொத்தம் 2 ஆயிரத்து 25 மெ.டன் விதைகள் இருப்பு

வைக்கப்பட்டுள்ளன. மேலும் குறுவை சாகுபடிக்காக 6 ஆயிரத்து 542 மெ.டன் யூரியா உரமும், 1638 மெ.டன் டிஏபி உரமும், 390 மெ.டன் பொட்டாஷ் உரம் என மொத்தம் 8 ஆயிரத்து 570 மெ.டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் 5ஆயிரத்து 483 மெ.டன் யூரியா, 1578 மெ.டன் டிஏபி, 2191 மெ.டன் பொட்டாஷ் என மொத்தம் 9 ஆயிரத்து 252 மெ.டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் இதுவரையில் பயிர் கடனாக தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் ரூ.2 கோடியே 29 லட்சத்து 84 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதை தவிர தேசிய வங்கிகள் மூலமும் பயிர் கடன் வழங்க திட்டமிட்டு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் நடப்பு காரிப் பருவத்தில் கடந்த மாதம் 30ந் தேதி வரையில் மொத்தம் 3 லட்சத்து 78 ஆயிரத்து 500 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## <u>எந்த மாதத்தில் எந்த உளுந்து விதைக்கலாம் வேளாண் அதிகாரிகள் விளக்கம்</u>

பழநி, : உளுந்து சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி வட்டார விவசாயிகள், நல்ல வடிகால் வசதியுள்ள அனைத்து நிலங்களிலும் உளுந்து சாகுபடி செய்யலாம். செப்டம்பர்-அக்டோபர் காலங்களில் வம்பன் 2, 3, 4 மற்றும் ஏபிகே 1 ஆகிய ரகங்களை பயிரிடலாம். ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் டிஎம்வி 1 ரகத்தை பயிரிடலாம். பிப்ரவரி-மார்ச் மாதங்களில் வம்பன் 4 மற்றும் டிஎம்வி 1 ரகத்தை பயிரிடலாம். எக்டேருக்கு 20 கிலோ விதையை 30க்கு10 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைகளை துத்தநாக சல்பேட் 100 பிபிஎம் கரைசலில் 1 கிலோ விதைக்கு 1 லிட்டர் கரைசல் என்ற அளவில் 3 மணிநேரம் ஊற வைத்து விதைக்க வேண்டும். ஊறிய விதைகளை நிழலில் ஆரம்ப ஈர நிலை வரும் உலர வைத்து 1 மாதம் வரை உபயோகிக்கலாம். 1 எக்டேருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் ரைசோபியம் (பயறு) உயிர் உரத்தை ஆறிய அரிசிக்கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணிநேரத்திற்குள்

விதைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மாவிரிடி 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். 2 அல்லது 3 முறை நிலத்தை நன்கு உழுது பண்படுத்தவேண்டும். மண் பரிசோதனை பரிந்துரைப்படி உர மிட வேண்டும். இறவை சாகுபடியாளர்கள் எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து இட வேண்டும். மானாவாரி விவசாயிகள் எக்டேருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து இட வேண்டும். மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45வது நாளில் 2% டிஏபி கரைசல் இட வேண்டும். பூக்கள் தோன்றும் ஒருமுறையும், 15 நாள் கழித்து என்ஏஏ 40 பிபிஎம் கரைசல் தெளிக்க வேண்டும். இறவை சாகுபடியில் எக்டேருக்கு 500 மில்லி புளுகுளோரலின் களைக்கொல்லியை 625 லிட்டர் நீரில் கலந்து, விதைத்த 3ம் நாள் தெளித்து உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும். பின், 25வது நாள் கைக்களை எடுக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் 20 மற்றும் 40வது நாளில் கைக்களை எடுக்க வேண்டும். உளுந்துக்கு மொத்தமாக 4 அல்லது 5 முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. குறிப்பாக பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் வறட்சியை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டுமென பழநி வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<u>சேலம் உழவர் சந்தைகளில் 195 டன் காய்கறிகள் ரூ55 லட்சத்திற்கு விற்பனை</u>**

சேலம், : ஆடிப்பெருக்கையொட்டி சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் நேற்று 195 டன் காய்கறிகள், ரூ55 லட்சத்திற்கு விற்பனையானது. சேலம் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, ஆட்டையாம்பட்டி, ஆத்தூர், மேட்டூர், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், இளம்பிள்ளை, இடைப்பாடி உள்ளிட்டஇடங்களில்உழவர்சந்தைகள்உள்ளன. நேற்று ஆடிப்பெருக்கையொட்டி சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் அகத்தி கீரை, பூசணிக்காய், வாழைக்காய், வாழைப்பழம், தேங்காய், வாழை இலை, பழம், உள்பட பல காய்கறிகளின்

விற்பனைஅமோகமாகஇருந்தது. 11 உழவர் சந்தைகளில் 1126 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 195 டன் 750 கிலோ காய்கறிகள் ரூ55 லட்சத்து 45 ஆயிரத்து 700க்கு விற்பனையானது. இந்த காய்கறிகளை 42 ஆயிரத்து 600 நுகர்வோர் வாங்கிச்சென்றனர். அதிகபட்சமாக சூரமங்கலம் உழவர் சந்தையில் 243 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 44 டன் காய்கறிகள் ரூ12 லட்சத்து 60 ஆயிரத்திற்கு விற்பனையானது. தாதகாப்பட்டியில் 238 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 38 டன் காய்கறிகள் ரூ10 லட்சத்து 41 ஆயிரத்திற்கும், அம்மாப்பேட்டையில் 112 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 16 டன் 500 கிலோ காய்கறிகள் ரூ4 லட்சத்து 55 ஆயிரத்திற்கும், அஸ்தம்பட்டியில் 72 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 12 டன் 600 கிலோ காய்கறிகள் கி3 லட்சத்து 67 ஆயிரத்திற்கும் விற்பனையானது என சேலம் மாவட்ட வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறினர்.

## போச்சம்பள்ளி சந்தையில் 5,000 ஆடுகள் விற்பனை

போச்சம்பள்ளி, : ஆடிப்பெருக்கு விழாவையொட்டி, போச்சம்பள்ளி வாரச்சந்தையில் நேற்று 5 ஆயிரம் ஆடுகள் விற்பனையானது. ஆடிப்பெருக்கு விழாவை யொட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வாரச்சந்தை களை கட்டியது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள், சந்தைக்கு சுமார் 5 ஆயிரம் ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ஆடுகள் கி6 ஆயிரம் முதல் கி 12ஆயிரம் வரை விற்கப்பட்டது. பண்டிகை தினம் என்பதால், மக்கள் மற்றும் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு ஆடுகளை வாங்கிச் சென்றனர். இதே போல், காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் விற்பனையும் அமோகமாக நடந்தது.

## டீத்தூள் 60 காசு விலை உயர்வு

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத் தில் இந்த ஆண்டுக்கான 33வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 17.29 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில், 12.30 லட்சம் கிலோ இலை ரகமும், 4.99 லட்சம் டஸ்ட் ரகமும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றாலும் 27 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கமடைந்தது. அனைத்து ரகத்துக்கும் கிலோ ஒன்றுக்கு 60 காசு மட்டுமே விலை உயர்வு கிடைத்தது. இந்த வார விலை நிலவரப்பபடி இலை ரகத்தில் சாதா கிலோ ஒன்றுக்கு ரூ.43 முதல் 48 வரையும், உயர் வகைக்கு ரூ.100 முதல் 160 வரையும், டஸ்ட் ரகம் சாதா ரூ.45 முதல் 49 வரையிலும், உயர் வகை ரூ.120 முதல் 175 வரையும் விலை கிடைத்தது. சிடிசி ரகத்துக்கு கிலோவுக்கு ரூ.193ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.220ம் கிடைத்தது. அடுத்த ஏலத்துக்கு 20.45 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## பாசனத்திற்கு அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் அரவக்குறிச்சி விவசாயிகள் கோரிக்கை

அரவக்குறிச்சி, : அமராவதி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. எனவே அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட அரவக்குறிச்சி பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகில் அமைந்துள்ள அமராவதி அணை 90 அடி உயரம் கொண்டது. 4,047 மில்லியன் கன அடி அணையின் மொத்தக் கொள்ளளவாகும். தற்போது அணையின் நீர் மட்டம் 59.63 அடியாகவும், நீர் வரத்து 1,865 கன அடியாகவும் உள்ளது. அமராவதி அணையின் மூலம் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டத்தை சேர்ந்த பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள்

பயன் பெறுகின்றது. கரூர் மாவட்டத்தில் மட்டும் 17 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறுகிறது. இதில் அரவக்குறிச்சி வட்டத்தில் கொத்தப்பாளையம், சின்னாக்கவுண்டனூர், பெருமாள்வலசு உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்களில் அமராவதி பாசன விவசாயிகள் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வாழை, நெல், சூரியகாந்தி, பருத்தி, சோளம், கம்பு போன்ற பணப் பயிர்கள்பயிரிட்டுவருகின்றனர். இந்நிலையில் கடும் வறட்சி காரணமாக கரூர் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்து கடந்த 23.7.14ல் அணையிலிருந்து குடிநீருக்காக 6 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் மூலம் நேற்று ஆடிப்பெருக்கு விழாவை கொண்டாடினர். இந்நிலையில் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், பாம்பாறு, தேனாறு, சின்னாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளிலிருந்து அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. எனவே அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் அரவக்குறிச்சியில் உள்ள அமராவதி பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மூலக்கரையில் 50 பேருக்கு இலவச கறவை மாடுகள் அமைச்சர் வழங்கினார்

வேதாரன்யம், : வேதாரண்யம் தொகுதிக்குட்பட்ட மூலக்கரை கிராமத்தில் 50 பயனாளிகளுக்கு ரூ.17 லட்சம் மதிப்புள்ள இலவச கறவை மாடுகளை அமைச்சர் ஜெயபால் வழங்கினார். மூலக்கரை ஊராட்சி மன்ற கட்டிட வளாகம் அருகே நடந்த விழாவிற்கு கலெக்டர் முனுசாமி தலை மை வகித்தார். நாகை தொ குதி எம்பி கோபால், எம்எல் ஏ காமராஜ், முன்னிலை வகித்தனர். கால்நடை பராமறிப்பு மண்டல இணை இயக்குனர் ராஜசேகரன் வரவேற்றார். விழாவில் 50 பயனாளிகளுக்கு ரூ.17 லட்சம் மதிப்பிலான விலையில்லா கறவைப் பசுக்களை மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் வழங்கி பேசியதாவது:

தமிழக மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காவும், எந்த ஒரு நிலையிலும் யாரிடமும் கையேந்த கூடாது என்பதற்காகவும் தமிழக முதல்வர் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் அந்த வகையில் ஏழை, எளிய மக்கள் வாழ்வில் முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். அதன்படி மூலக்கரை ஊராட்சியைச் சேர்ந்த நான்கு விதவைகள், ஒரு மாற்று திறனாளி உட்பட 50 பெண்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி அவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சுசீலாதேவி சரவணன், நிலவள வங்கி தலைவர் சிவானந்தம், மாவட்ட ஊராட்சி கவுன்சிலர் சண்முகராசு, ஊராட்சி மன்ற தலைவர் கலைவாணி செந்தில்குமார், தாசில்தார் சாந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜரெத்தினம், சந்தானம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஜெயபாரதி ஆறுமுகம், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்கள் சங்க தலைவர் ராதாகிருஷ்ணன், வேதாரண்யம் கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் வீரராசு உட்பட பலர் கலந்து கொண்டனர் கால்நடைத்துறை உதவி இயக்குனர் ரமேஷ் நன்றி கூறினார்

## தென்னையில் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த செயல் விளக்கம்

கூடலூர், : தென்னை யில் வண்டு தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் அதை கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளிடம் குள்ளப்புரம் வேளாண் கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம் அளித்தனர். கிராம தங்கல் திட்டத்தின் கீழ், குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் பாஞ்சாலிமீனா, பத்மாவதி, பிரின்சி, யோகப்பிரியா, கனிமொழி, ரணதீபா ஆகியோர் கம்பம் பள்ளத்தாக்கில் தங்கி விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்களை விளக்கி வருகின்றனர். களப்பயிற்சியின் ஒரு பிரிவாக சுருளிப்பட்டி கிராம விவசாயிகளுக்கு, தென்னை மரத்தில் காண்டாமிருக வண்டு

மற்றும் சிவப்பு கூன் வண்டுகளின் தாக்குதலின் அறிகுறிகள், கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தனர். இதைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு, தீவனப்பயிர் சாகுபடி செயல் விளக்கத்தில் சீமைப்புல் நடவுசெய்யும் முறைகள், அதன் பயன்கள், கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்கும் முறைகள் குறித்து பயிற்சியில் விளக்கமளித்தனர். நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கத்தரி, வெண்டை விலை குறைந்தது

நாமகிரிப்பேட்டை,: நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட் நடக்கிறது. இங்குள்ள காமதேனு உழவர் கூட்டமைப்பின் காய்கறி மண்டியில் நேற்றைய காய்கறி விபரம்: பெங்களூர் தக்காளி கிலோ ரூ42க்கு விற்பனையானது. நாட்டுத்தக்காளி ரூ44க்கும் கத்தரிக்காய் கிலோ ரூ15 வரைக்கும் விற்பனையானது. வெங்காயம் கிலோ ரூ30க்கும், பீர்க்கங்காய் கிலோ ரூ26 க்கு, புடலை ரூ20க்கும் விற்பனையானது. சுரைக்காய் கிலோ ரூ15 க்கும் பீட்ரூட் ரூ20க்கும் வாழைப்பழம் கிலோ ரூ35 க்கும் காலிபிளவர் ஒரு பூ ரூ18ம் தேங்காய் ரூ 15 வரைக்கும், முட்டை கோஸ் ரூ15க்கும் விற்பனையானது. கடந்த வாரத்தை விட வெண்டைவிலை, கத்தரி, முள்ளங்கி, அவரை விலை குறைந்துள்ளது.

## நீர்பிடிப்பு பகுதியில் மழை நீடிப்பு பவானிசாகர் அணை நிரம்ப வாய்ப்பு

ஈரோடு, : பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நீடிக்கும் மழையால் இந்த ஆண்டு அணை நிரம்புவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் கூடுதல் நீர்வரத்தை எதிர்பார்த்து ஈரோடு மாவட்ட விவசாயிகள் காத்திருக்கின்றனர். பவானிசாகர் அணையின் மொத்த உயரம் 105 அடி. நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்திலும், கேரளாவிலும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை சீசன் சமயத்தில் பெய்யும் மழைநீரை பவானிசாகர் அணையின் மூலம் சேமித்து ஈரோடு மாவட்டத்திலுள்ள 2.40 லட்சம் ஏக்கர் பாசன நிலங்களுக்கு

தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. கீழ்பவானி, தடப்பள்ளி-அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்துக்குட்பட்ட வாய்க்கால்கள் மூலம் தண்ணீர் பாயும் போது வழிநெடுக உள்ள கிராமங்களின் குடிநீர் ஆதாரமாகவும், கால்நடைகளின் குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது. இதுதவிர வெள்ளோடு, தயிர்பாளையம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட ஏரி, குளங்களின் நீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது. பாசன நிலங்கள், ஏரி, குளம் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் அனைத்தும் மேம்பட வேண்டுமானால் பவானிசாகர் அணையின் நீர்இருப்பு போதுமானதாக இருக்க வேண்டியது அவசியம். கடந்த 4 ஆண்டுகளாக அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய அளவில் மழை பெய்யாததால் 2010ம் ஆண்டுக்கு பிறகு ஒருமுறை கூட பவானிசாகர் அணை நிரம்பவில்லை. குறிப்பாக கடந்த 2 ஆண்டுகளாக நீர்வரத்து குறைந்து போனதால் கடந்த 2012ம் ஆண்டில் கீழ்பவானி வாய்க்கால் பகுதியில் ஒரு போகம் நன்செய் பாசனமும், கடந்த 2013ல் புன்செய் பாசனமும் கடும் பாதிப்படைந்தது. இதன் காரணமாக மாவட்டம் முழுவதும் வறட்சியின் கோரத்தாண்டவம் காரணமாக ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் காய்ப்பு தன்மை இன்றி பட்டு போனது. இதுமட்டுமின்றி நீண்ட கால பயிர்களான வாழை, கரும்பு, மஞ்சள் சாகுபடியும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த ஆண்டிலாவது பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அணை நிரம்புமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் எழுந்துள்ளது. கடந்த மாத துவக்கம் வரையிலும் பவானிசாகர் அணையின் நீர்இருப்பு 40 அடியாக குறைந்து போனதால் கடும் விரக்தியில் இருந்த ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு தற்போது அணைக்கு நீர்வரத்து அதிகரித்திருப்பதால் உற்சாகம்அடைந்துள்ளனர். தற்சமயம் நீலகிரி மற்றும் கேரளாவில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பில்லூர் அணை நிரம்பி அங்கிருந்து வரும் உபரிநீர் அப்படியே பவானி ஆற்றில் திறந்து விடப்படுகிறது. இதன் காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று காலை 8 மணிக்கு அணைக்கு 8717 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்த நிலையில் அணையின் நீர்மட்டம் 70.89 அடியாக இருந்தது. இந்நிலையில் நேற்று இரவு 8

மணியளவில் அணைக்கு நீர்வரத்து 6127 கனஅடியாக குறைந்து போனது. அணையின் நீர்மட்டம் 71.32 அடியாக இருந்தது. வேகமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அணையில் தற்சமயம் 11.5டிஎம்சி., நீர் இருப்பு உள்ளது. தற்போது அணைக்கு நீர்வரத்து குறைந்த போதிலும் இனி அடுத்ததாக வடகிழக்கு பருவமழை சீசன் உள்ளதால் இந்த ஆண்டு பவானிசாகர் அணை நிரம்ப வாய்ப்புள்ளதாக விவசாயிகள் கருதுகின்றனர். விவசாயிகள் கூறுகையில், கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சீசன் பொய்த்து போனதால் வடகிழக்கு பருவமழை மட்டுமே கை கொடுத்தது. இதன் காரணமாக கடந்த ஆண்டு அதிகபட்சமாக 90 அடி வரை மட்டுமே பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. ஆனால் இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே 72 அடியை நெருங்குவதால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சீசன் சமயத்தில் ஓரளவு நீர்வரத்து அதிகரித்து அணை நிரம்பும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது, என்று தெரிவித்தனர். அணை நிரம்பும்பட்சத்தில் மாவட்டத்திலுள்ள 2.40 ஏக்கர் நிலங்கள் மட்டுமின்றி கசிவுநீர் குட்டை மூலம் பாசனம் பெறும் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், ஆயக்கட்டு அல்லாத பாசன நிலங்களிலும் வேளாண் பணிகள் நீண்ட இடைவெளிக்கு பிறகு சுறுசுறுப்பு அடையும் என்பதால் அணை நிரம்பும் நாளை விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

## <u>நவீன உழவு கருவி செயல் விளக்கம்</u>

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் அருகில் உள்ள காட்டகரம் கிராமத்தில் கதிரவன் என்பவருடைய வயலில் அரியலூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் நவீன முறையில் உழவு செய்யும் கருவி மற்றும் மினி டிராக்டர் மூலம் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இதில் வேளாண் பொறியியல் துறை சேர்ந்த பொறியாளர்கள் கலைமணி, நாகநாதன், ராஜாராம், நடராஜன், ஜெயவேலு ஆகியோர் செயல் விளக்கம் செய்து காண்பித்து விளக்கம் அளித்தனர். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## விவசாய தொழில்கள் ஒரு நாள் பயிலரங்கம் நாளை நடக்கிறது

தஞ்சை, : தஞ்சையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் நடக்கும் விவ சாயம் சார்ந்த தொழில்கள் குறித்த பயிலரங்கம் நாளை நடக்கிறது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தஞ்சை மண்டல அலுவலகம் சார்பில் விவ சாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களை அடிப்படையாக கொண்ட தொழில்களில் தொழில் முனைவோரை உருவாக்கும் நோக்கோடு ஒரு நாள் பயிலரங்கம் நாளை நடக்கிறது. இந்த பயிலரங்கில் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொள்கின்றனர். இதில் கலந்து கொள்ள விரும்பும் அறிவியல், தொழில்கல்வி, தொழில்நுட்பம், மேலாண்மை பயின்ற பட்டதாரிகள் <ஷ்ஷ்ஷ்.ஜீனீப.மீபீப> அல்லது வீஷீதீமீஜீக்ஷீமீஸீமீபக்ஷீ என்ற இணைய தள முகவரியில் தங்களது விவரங்களை பதிவு செய்து கொள்ள லாம். பயிலரங்கில் கலந்து கொள்பவர்களின் தேர்வு குறித்த செய்தி குறுந்தகவல் மூலமாகவோ அல்லது மின்னணு அஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கப்படும். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கர்நாடக மாநில அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



மைசூர், கர்நாடக மாநிலத்தில் கே.ஆர்.எஸ். அணை நிரம்ப இன்னும் 5 அடியே பாக்கி உள்ளதால், கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, மண்டியா மாவட்டத்தில் உள்ள கே.ஆர்.எஸ். அணைக்கு (கிருஷ்ணராஜ சாகர்) நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு 34 ஆயிரத்து 617 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனால் அணையில் நீர்மட்டம் கிடுகிடுவென்று உயர்ந்து வருகிறது. 124.80 அடி கொள்ளவு கொண்ட அணையில் நேற்று காலை நிலவரப்படி நீர்மட்டம் 120 அடியாக உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 21 ஆயிரத்து 31 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

<u>வெள்ள அபாயம்</u>

அணை நிரம்ப இன்னும் 5 அடியே பாக்கி உள்ளதாலும், குடகு மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதாலும் இன்னும் ஒரு வாரத்துக்குள் அணை தனது முழு கொள்ளளவையும் எட்டி விடும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். அணையில் இருந்து அதிகளவு தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளதால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து, கரையோர கிராம மக்களுக்கு மாவட்ட நிர்வாகம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்து உள்ளது. தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

<u>கபினி அணை</u>

இதேபோல், மைசூர் மாவட்டம் எச்.டி.கோட்டை தாலுகா சரகூரு கிராமத்தில் உள்ள கபினி அணைக்கும் தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருகிறது. அந்த அணை ஏற்கனவே நிரம்பி விட்டது. 2284.8 அடி கொள்ளளவு கொண்ட அந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 2282.30 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. கே.ஆர்.எஸ். அணையில் இருந்து தண்ணீர் அதிகளவில் திறந்து விடப்பட்டு உள்ளதால், தமிழகத்துக்கு காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

## <u>பட்டு வளர்ச்சித்துறையில் இளநிலை ஆய்வாளர், உதவி ஆய்வாளர்கள் நேரடியாக நியமனம்; அமைச்சர் ப.மோகன் அறிவிப்பு</u>

சென்னை, பட்டு வளர்ச்சித்துறை யில் இளநிலை ஆய்வா ளர், உதவி ஆய்வாளர் கள் நேரடியாக நியமனம் செய்யப்படுவார்கள் என்று அமைச்சர் ப.மோகன் அறிவித்துள்ளார். நியமனம் தமிழக சட்டசபையில் பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள் குறித்து எம்.எல்.ஏ.க்கள் வைத்த வாதங்களுக்கு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர்கள் நலத்துறை அமைச்சர் ப.மோகன் பதிலளித்துப் பேசினார். அப்போது அவர் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:- தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறையின் கீழ் 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் அத்தியாவசிய பணியிடங்களான இளநிலை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படும். 2014-15-ம் ஆண்டில் இளநிலை ஆய்வாளர்கள் பதவித் தரத்தில் 150 இளநிலை ஆய்வாளர்களும், 12 உதவி ஆய்வாளர்களும் நேரடி நியமன முறையில் நிரப்பப்படுவார்கள். தயாரிப்பு பயிற்சி 2014-15-ம் ஆண்டில் மழைநீர் சேகரிப்பை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அரசு பட்டுப் பண்ணைகளில் கூடுதலாக 30 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும். உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்வதற்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். தமிழகத்தின் பாரம்பரியமான கைத்திறத் தொழில்களில் ஒன்றான காகிதக் கூழ்பொம்மைகள், கொலு போன்ற விழாக்காலங்களில் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. இதை தயாரிக்கும் பயிற்சி திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் 50 மகளிருக்கு வழங்கப்படவுள்ளது. பயிற்சியின்போது அனைத்துப் பயிற்சியாளர்களுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களும், மாதந்தோறும் மூவாயிரம் உதவித்தொகையும் வழங்கப்படும்.பஞ்சலோக சிற்ப தயாரிப்பு பஞ்சலோகச் சிற்பங்கள் தயாரிப்புத் தொழிலை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல ஆர்வமுள்ள 6 இளம் கைவினைஞர்களுக்கு ஈரோட்டில் மூன்றாண்டு பயிற்சி, ரூ.30 லட்சம் செலவில் குருகுல முறையில் அளிக்கப்படும். கைவினைஞர்களுக்காக, கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது, குழு உற்பத்தி விருது, பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது ஆகிய புதிய விருதுகள் இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்படும். இவ்வாறு அவர் அறிவித்தார்.

**காய்கறி விலை உயராமல் தடுக்க தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்தை கைவிட வேண்டும் விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி பேட்டி**



காய்கறி விலை உயராமல் தடுக்க தமிழகத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தை கைவிட வேண்டும் என்று விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி கூறினார். தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி கோவையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். பேட்டியின் போது அவர்கூறிய தாவது:-

காய்கறி விலை உயர்வு

கடந்த 1 வாரத்துக்கு முன்பு கர்நாடகா, ஆந்திராவில் கடும் மழை பெய்ததால் தக்காளி பயிர்கள் பாதிக்கப்பட்டன. இதனால் தமிழகத்தில் தக்காளி விலை கிலோவுக்கு ரூ.60-ல் இருந்து ரூ.80 வரை உயர்ந்தது. தற்போது கூலி ஆட்கள் பற்றாக்குறையால் தமிழகத்தில் தக்காளிக்கு கூட வெளி மாநிலங்களை நம்பி இருக்க வேண்டி உள்ளது. காய்கறிகள் தமிழர்களின் உணவு பழக்கத்தில் முக்கியபங்கு வகிக்கிறது. ஆனால் காய்கறி உற்பத்திக்கு அதிக அளவில் கூலிஆட்கள் தேவைப்படுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. எந்திரங்களை கொண்டு காய்கறிகளை உற்பத்தி செய்ய முடியாது. தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டம் தொடங்கியதில் இருந்து காய்கறி விவசாயத்துக்கு வந்து கொண்டிருந்த குறைந்த அளவிலான கூலி ஆட்களும் வராமல் அந்த திட்டத்துக்கு சென்று விட்டனர்.

கைவிட வேண்டும்

இதனால் பெரும்பாலான விவசாயிகள் காய்கறி விவசாயத்தை கைவிட்டு சொட்டு நீர் பாசனம் மூலம் தென்னை, வாழை, கரும்பு, பூ ஆகிய விவசாயத்துக்கு மாறிக்கொண்டனர். இதனால் தான் தமிழ்நாட்டில் காய்கறி உற்பத்தி குறைந்து விலை உயர்ந்து உள்ளது. ஆகவே விவசாயிகள் நலன் கருதியும், காய்கறி விலை மேலும் உயராமல் தடுக்க பொதுமக்கள் நலன் கருதியும், 100 நாள் வேலை திட்டத்தை கைவிட தமிழக முதல்-அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும். மத்திய அரசும் இந்த திட்டத்தை கைவிடவே விரும்புகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

<u>பாதுகாப்பு சட்டம்</u>

தமிழகத்தில் வறட்சி நிலவினாலும், மலை அடிவார கிராம ஓடைகளில் கட்டப்பட்ட தடுப்பணைகளில் மழை நீர் தேங்கி இருப்பதால், கிணறுகளிலும், ஆழ்துளை கிணறுகளிலும் காய்கறி உற்பத்திக்கு தேவை யான தண்ணீர் உள்ளது. ஆனால் யானைகளும், மற்ற விலங்குகளும், பறவைகளும் மலையடிவார கிராமங்களில் காய்கறி பயிர்களை நாசம் செய்வதால், காய்கறி பயிர் உற்பத்தி செய்ய முடியாமல் உள்ளது. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாய திட்டங்கள் குறித்து வேளாண்மை இயக்குனர் நேரில் ஆய்வு



மதுரை, தமிழக அரசின் வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை, வேளாண்த்துறை இயக்குனர் ராஜேந்திரன் நேரில் ஆய்வு செய்தார். அப்போது மேலூர் தெற்குத்தெரு பகுதியில் உள்ள பசுந்தாள் உர விதைப்பண்ணையை பார்வையிட்டு, அதன் பலன்கள் பற்றியும், விவசாயிகளுக்கு

கிடைக்கும் ஆதாயம் பற்றியும் அதிகளவு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து அட்மா திட்டத்தின் கீழ் சின்னமாங்குளம் கிராமத்தில் எள் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பண்ணைப்பள்ளி, அலங்காநல்லூரில் விவசாயிகள் பயன்படுத்தி வரும் சூரியசக்தி மூலம் இயங்கும் பம்பு செட் மோட்டார், அழகாபுரி, குட்டிமேய்க்கிப்பட்டி கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகள் மற்றும் கழிவுநீர்க் குட்டைகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெய்சிங்ஞானதுரை, துணை இயக்குனர்கள் கனகராஜ், சாரநாத்பாபு, ரவிச்சந்திரன், தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் வடிவேல் குமார் உள்ளிட்ட வேளாண்த்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**<u>விலையில்லா கறவை மாடுகள் மூலம் பெறப்படும் பாலை ஆவின் நிறுவனத்திற்கே வழங்க வேண்டும் கலெக்டர் ஞானசேகரன் உத்தரவு</u>**

விலையில்லா கறவை மாடுகள் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாடு களில் இருந்து பெறப் படும் பாலை ஆவின் நிறுவனத்திற்கே வழங்க வேண்டும் என்று கலெக் டர்

உத்தரவிட்டுள்ளார். 2,100 கறவைமாடுகள் திருவண்ணாமலை மாவட் டத்தில் முதல்-அமைச்சரின் விலையில்லா கறவைமாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவை மாடு கள் மூலம் உற்பத்தியாகும் பால்முழுவதும் பால் உற்பத் தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு வழங்குதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் அ.ஞானசேகரன் தலைமையில் நடந்தது. திருவண்ணாமலை மாவட் டத்தில் 2011-12, 2012-13, 2013-14 ஆகிய மூன்று ஆண்டுகளில் தலா 700 மாடுகள் வீதம் 2,100 விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இம்மாடுகளில் இருந்து உற் பத்தியாகும் பால் 38 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தினசரி சராசரியாக 5297 லிட்டர்பால் கொள்முதல் செய்யப்பட்டு ஆவின் நிறுவனத்திற்கு அனுப்பப்படுகிறது. ஆவின் நிறுவனத்திற்கு இத்திட்டத்தின் கீழ் வழங் கப் பட்ட மாடுகளுக்கு வாரம் இரண்டு முறை கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர் கள் மற்றும் ஆவின் கால்நடை மருத்துவர்கள் மூலம் பயனா ளிகளின் இருப்பிடத்திற்கு சென்று கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யப்படுகிறது. மேலும் இப்பயனாளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தமி ழக அரசின் நல திட்டங்கள் வழங்கப்படுகிறது.தமிழக அரசின் மூலம் விலையில்லா கறவை மாடு கள் பெற்று தனியாருக்கு பால் வழங்கும் பயனாளிகளை நேரில் தொடர்பு கொண்டு உற்பத்தி செய்யப்படும் பால் முழுவதும் ஆவின் நிறுவனத் திற்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிக ளுக்கு கலெக்டர் உத்தரவு வழங்கினார். கூட்டத்தில் கால்நடைத் துறை மண்டல இணை இயக் குனர் டாக்டர் சி.ஏ.செல்வ ராஜி துணைப்பதிவாளர் ரா.முனிராஜ் துணை இயக்குனர் கள் பி.செல்வன் கே.மணி, கால்நடை மருத்துவர்கள் மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.